[1979 நவம்பர் 8

Anicut across Ayyaru

* Q. No. 156 ; Thiru S. V. RAMASWAMY : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(a) whether there is any proposal under the consideration of the Government to construct an anicut across the river Ayyaru near Puliyancholai in Kolli hills in Thuraiyoor taluk, Tiruchi district ; and

(b) if so, the estimated expenditure therefor and when it will be taken up for implementation ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) அய்யாற்றின் குறுக்கே புளியஞ்சோலையின் அருகிலாவது அதற்குக் கீழேயாவது ஒரு நீர்த்தேக்கம் கட்டுவதற்கு ஆய்வுகள் நடந்து வருகின்றன.

(ஆ) ஆய்வுபணிகள் நடந்து முடிந்த பின்னரே மதிப்பீடு எவ்வளவு என்றும் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சொல்ல இயலும்.

சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்தில் பருத்தி சாகுபடி

* வினா எண். 157 திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிங்காநல்லூர் தொகுதி சர்க்கார் சாமக்குளம் யூனியனில் 1978-ம் ஆண்டில் பருத்தி விவசாயம் நடைபெற்ற ஏக்கரின் பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) ஏக்கருக்குச் சராசரியாக கிடைத்த மகசூல் என்ன ?

(இ) தரமான விதையும் மருந்தும் வழங்கப்படாததால் பருத்தி பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஈ) அப்படிப்பட்ட பாதிப்பில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) 4,448 ஏக்கர்

(ஆ) ஏக்கருக்கு 6 குவின்டால்.

(இ) பாதிக்கப்படவில்லை.

(ஈ) கேள்வி எழாது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : அமைச்சர் அவர்கள் ஏக்கருக்கு ஆறு குவின்டால் பருத்தி விளைச்சல் விளைந்திருக்கிறது என்று அறிவித்தார்கள். விளைச்சலில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் அறிவித்தார்கள். நான்

1979 நவம்பர் 8]

ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு ஏக்கரிலே பத்துப் பதினைந்து பொதி வரை பருத்தி உற்பத்தியான அந்தப் பகுதியில் இன்றைக்கு ஏக்கருக்கு இரண்டு அல்லது மூன்று பொதி பருத்திதான் உற்பத்தியாகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட நிலைமை எனக்குத் தெரியாது. இருந்தாலும் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களைக் காட்டிலும், எனக்கும் சொந்த அனுபவம் உண்டு. ஆகவே, கோவை மாவட்டத்தில் குறிப்பாக ஆறு குவிண்டாலுக்கு மேல் ஏக்கருக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : அமைச்சர் அவர்களுக்கு இந்த பருத்தி விவசாயத்தில் எந்த அளவுக்கு அனுபவம் இருக்கின்றதோ அதே போன்று உறுப்பினர் என்ற முறையில் எனக்கும் அந்த அனுபவம் இருக்கிறது. எனக்கு இருக்கிற அனுபவத்தில் என்னுடைய வட்டாரத்தில் இருக்கும் யதார்த்த நிலைமை நான்காண்டுகளுக்கு முன்னால் ஏக்கருக்கு 10 பொதி, 12 பொதி உற்பத்தியாவது சென்ற ஆண்டு முடிவில் இரண்டு பொதி மூன்று பொதி என்ற அளவுக்குத் தான் யதார்த்தமாக உற்பத்தி ஆகியிருக்கிறது. அதற்கு அடிப் படையான காரணம் என்ன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சரியான விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1978 ஆம் ஆண்டில் மட்டும் கடும் மழை பாதிப்பு காரணமாக விளைச்சல் குறைந் திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் யாருக்கும் கஷ்டம் ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வருகிற வருமானத்தில் வேண்டுமானால் குறைவு எற்பட்டிருக்கலாம். 1977-ல் ஆயிரம் ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் ஏக்கருக்கு வந்திருந்தால் 1978-ல் 500 ரூபாயாகக் குறைந்திருக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் இரண்டு பொதி மூன்று பொதி என்ற அளவுக்கு விளைச்சல் குறையவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடப் பணியாளர்கள்

* வினா எண். 158 திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒழுங்குமுறை விற்பனைக் கூட பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்ற அரசு ஆலோசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.